


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 251 | உள்ளூர் - 08.09.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 251 | வெளியூர் - 09.09.2026 | புதன்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**சனி பெயர்ச்சியால் யாருக்கு நிம்மதி?**

**வங்கி வேலைவாய்ப்பு 2026: SBI + IOB-ல் 498 பணிகள்!**

**அவையில் அமளி... திமுக எம்.எல்.ஏ.க்கள் அதிரடி வெளியேற்றம்!**

**ஆம்னி பேருந்துகளுக்கு எச்சரிக்கை!**

## கேஸ் சிலிண்டர் முன்பதிவில் பெரிய தளர்வு!

புதுடெல்லி, செப். 08–

கிராமப்புறங்களில் வீட்டு உபயோக LPG சிலிண்டர் முன்பதிவு இடைவெளி 45 நாட்களில் இருந்து 25 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது. இனி கிராமம், நகரம் என பாகுபாடின்றி அனைத்து வீட்டு உபயோக LPG வாடிக்கையாளர்களும் 25 நாட்களுக்கு ஒருமுறை புதிய சிலிண்டரை முன்பதிவு செய்யலாம்.




சர்வதேச பதற்றம் மற்றும் ஈரான் அமெரிக்கா மோதல் காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடையால் வணிக சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதையடுத்து உள்நாட்டு LPG விநியோகத்தை சீராக்க மத்திய அரசு தற்காலிகமாக முன்பதிவு கட்டுப்பாடுகளை விதித்தது. அப்போது நகர்ப்புறங்களுக்கு 25 நாட்களும், கிராமப்புறங்களுக்கு 45 நாட்களும் இடைவெளி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தற்போது LPG விநியோகம் இயல்புநிலைக்கு திரும்பியதுடன், சிலிண்டர் முன்பதிவு நிலுவைகளும் பெருமளவில் குறைந்துள்ளதால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இதையடுத்து IOCL, BPCL, HPCL ஆகிய எண்ணெய் நிறுவனங்களுக்கு, நாடு முழுவதும் அனைத்து வீட்டு உபயோக LPG வாடிக்கையாளர்களுக்கும் 25 நாள் முன்பதிவு நடைமுறையை உடனடியாக அமல்படுத்த மத்திய பெட்ரோலிய அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

## மோடி நிகழ்ச்சிக்கு இப்படியொரு வரவேற்பா? டிக்கெட்டுகள் SOLD OUT! 42,000 பேர் காத்திருப்பு!

புதுடெல்லி, செப். 08–

குஜராத் மாநிலம் வதோதராவில் நடைபெற உள்ள பிரதமர் மோடியின் பொது நிகழ்ச்சிக்கான இலவச முன்பதிவு டிக்கெட்டுகள், ஆன்லைனில் தொடங்கிய ஒரே மணி நேரத்தில் முழுமையாக விற்றுத் தீர்ந்தன. மேலும், டிக்கெட் கிடைக்காமல் 42 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.




வதோதரா மாநகராட்சி சார்பில் முன்பதிவு நிர்வகிக்கப்பட்ட நிலையில், கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும் பாது காப்பான நுழைவை உறுதி செய்யவும் QR குறியீடு கொண்ட டிஜிட்டல் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுடன் '2047–க்குள் வளர்ந்த இந்தியா' என்ற இலக்கு குறித்து பிரதமர் மோடி உரையாற்றுகிறார்.

மேலும், குஜராத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ரூ.35,000 கோடிக்கும் அதிகமான ரயில்வே மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை தொடங்கி வைத்து, பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமர் மோடியின் பொது நிகழ்ச்சிக்கு புக்மைஷோ மூலம் டிஜிட்டல் முன்பதிவு மற்றும் இருக்கை ஒதுக்கீடுசெய்ய ப்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான்–அமெரிக்கா போர்
# முடிவுக்கு வருகிறதா? ஹார்முஸ் -ல் திடீர் பரபரப்பு!
## கத்தார் அதிரடி!!

வாஷிங்டன், செப். 08–

ஈரான் அமெரிக்கா இடையிலான போர் பதற்றம் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், கத்தார் மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கை சர்வதேச அளவில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.



உலகின் முக்கிய இயற்கை எரிவாயு உற்பத்தியாளர்களில் ஒன்றான கத்தார், ஈரானின் தாக்குதலால் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டது. கத்தாரின் எரிவாயு உற்பத்தி நிலையங்கள் ஏவுகணை தாக்குதலில் சேதமடைந்ததைத் தொடர்ந்து, பல மாதங்களாக உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, ஜூலை மாதம் கத்தார் நாட்டைச் சேர்ந்த கப்பல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து கப்பல் போக்குவரத்தும் பெரிதும் முடங்கியது.

இந்த சூழலில், ஆகஸ்ட் மாதம் முதல் கத்தார் தனது எரிவாயு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மீண்டும் வேகப்படுத்தி வருகிறது. அதன் முக்கிய நடவடிக்கையாக, உலகின் பல்வேறு பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கத்தாருக்கு சொந்தமான சுமார் 6 காலி LNG கப்பல்கள், ஹார்முஸ் நீரிணையை கடந்து பெர்சியன் வளைகுடாவில் உள்ள கத்தார் துறைமுகத்தை நோக்கி பயணித்து வருகின்றன.

இதற்கிடையே, செப்டம்பர் தொடக்கத்தில் ஈரானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என கத்தார் வலியுறுத்தியது. அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கைகளும் கடந்த ஒரு வாரமாக குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஹார்முஸ் நீரிணையில் சில பகுதிகளை தடை செய்ய ஈரான் திட்டமிட்டு வரும் நிலையில், கத்தார் தனது கப்பல்களை மீண்டும் அனுப்புவது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

போர் முடிவை நோக்கி செல்கிறதா? அல்லது ஈரானுடன் தனி ஒப்பந்தம் செய்து எரிவாயு ஏற்றுமதியை முழுவீச்சில் தொடங்க கத்தார் தயாராகிறதா? என்பது சர்வதேச அரசியல் மற்றும் எரிசக்தி சந்தையின் முக்கிய கேள்வியாக மாறியுள்ளது.

மேலும், கடந்த 23 மாதங்களாக கத்தார் குவைத்துக்கு எரிவாயு விநியோகம் செய்து தனது சேமிப்பு இருப்பையும் மேம்படுத்தி வருகிறது.

## அவையில் அமளி... திமுக எம்.எல்.ஏ.க்கள் அதிரடி வெளியேற்றம்!

சென்னை, செப். 08–

பேரவைத் தலைவர் இருக்கை முன்பாக அமளியில் ஈடுபட்ட திமுகவினரை காவலர்கள் வெளியேற்றினர்.

காவல்துறை, மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட துறைகளின் மானியக் கோரிக்கை விவாதங்களின் மீது முதல்வர் விஜய் நேற்று (திங்கள்) பதிலுரை அளித்தார். அப்போது முதல்வர் விஜய், திமுக மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.



முதல்வரின் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதிலளிக்க அனுமதி கோரிய நிலையில் பேரவைத் தலைவர் அனுமதி மறுத்தார். இதனால் திமுகவினர் அமளியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து இன்றும், முதல்வர் நேற்று ( 07.09.2026)பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரி திமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர். பேரவைத் தலைவர் இருக்கை முன்பாக திமுகவினர் திரண்டு கோஷமிட்டனர்.

பின்னர், திமுக கொறடா எ.வ. வேலு பேச அனுமதியளிக்கிறேன், அனைவரும் அவரவர் இடத்தில் சென்று அமர பேரவைத் தலைவர் கோரிக்கை வைத்தார்.

எனினும் திமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டதால், 'பேரவை விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அமைச்சர் செங்கோட்டையன் வலியுறுத்தினார். இதையடுத்து திமுக எம்எல்ஏக்களை வெளியேற்றும்படி காவலர்களுக்கு பேரவைத் தலைவர் உத்தரவிட்டார். இதையடுத்து காவலர்கள், திமுகவினரை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றனர். பின்னர் பேரவைத் தலைவர் "அவையை நடத்தவிடாமல் தடுக்கவேண்டும்என்றுதிமுகவினருக்கு உள்நோக்கம் இருக்கிறது. அவையின் மாண்பைக் குலைத்ததால் அவர்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அது தவறு என்று நான் கருதவில்லை" என்று கூறினார்.

## சட்டப்பேரவை மாண்பு கேள்விக்குள்ளாகிவிட்டது! மு.க. ஸ்டாலின்!!



சென்னை, செப். 08–

சென்னை அண்ணா அறிவாலயத்தில் இருந்து புறப்பட்ட திமுக தலைவர் மு.க. ஸ்டாலினிடம், சட்டப்பேரவை நிகழ்வு பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த மு.க. ஸ்டாலின், "மாண்போடு நடக்கிறதா? எனக் கேள்வி கேட்கும் அளவுக்கு சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இரண்டு தொகுதிகள் இடைத்தேர்தலில் திமுக நிலைப்பாடு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மு.க. ஸ்டாலின் பதிலளிக்காமல் சென்றுவிட்டார்.

## தங்கம் விலை உயர்வு!



சென்னை, செப். 08–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (செப்.8) கிராமுக்கு ரூ. 140 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 14,270–க்கும் சவரனுக்கு ரூ. 1,120 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,14,260–க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ. 255, கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2,55,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## இஸ்ரோவின் 200 டன் என்ஜின் சோதனை வெற்றி!



திருநெல்வேலி, செப். 08–

திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில், ராக்கெட்டில் பயன்படுத்தப்படும் செமி கிரையோஜெனிக் என்ஜி னின் 200 டன் முழு உந்து விசை சோதனை வெற்றிக ரமாக நடைபெற்றது.

இதற்கு முன்பு 47%, 60%, 88% உந்துவிசை அளவுகளில் சோதனைகள் நடத்தப்ப ட்ட நிலையில், தற்போது 100% திறனில் 200 டன் உந்துவிசையில் சோதனை நடைபெற்றது. மொத்தம் 35 விநாடிகள் நடந்த சோதனை யில், அனைத்து என்ஜின் அளவீடுகளும் எதிர்பார்த்த இலக்கை எட்டின. இந்த என்ஜின் சோதனைகள் எல்விஎம்3 ராக்கெட்டின் உந்துவிசை திறனை அதி கரிக்க மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் அதிக எடையை விண்வெளிக்கு எடுத்துச் செல்லும் திறன் மேம்படும்.

## பினராயி விஜயன், அவரது மகள், மருமகன் மீது எஃப்ஐஆர்! கேரள டிஜிபிக்கு அமலாக்கத்துறை கடிதம்!

திருவனந்தபுரம், செப். 08–

சிஎம்ஆர்எல் பணமோசடி வழக்கில் கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன், அவரது மகள் டி. வீணா மற்றும் மருமகனும் முன்னாள் அமைச்சருமான பி.ஏ. முகமது ரியாஸ் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக் கோரி கேரள காவல்துறை தலைவருக்கு அமலாக்கத்துறை கடிதம் எழுதியுள்ளது.



கேரளத்தில் சிஎம்ஆர்எல் (கொச்சின் மினரல்ஸ் மற்றும் ரூடைல் நிறுவனம்) என்ற நிறுவனம் கருமணலை சட்டவிரோதமாகத் தோண்டி எடுப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை கண்டுகொள்ளாமல் இருக்க மாநிலத்தில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு பணம் கொடுத்ததாகப் புகார் எழுந்தது. வீணாவின் 'எக்ஸாலாஜிக்' நிறுவனத்துக்கு எந்தவித சேவையையும் பெறாமல் கடந்த 2018 மற்றும் 2019–ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் மாதம்தோறும் ரூ. 1.72 கோடியை சிஎம்ஆர்எல் வழங்கி வந்ததும் கண்டறியப்பட்டது. இதுதொடர்பாக, சிஎம்ஆர்எல் நிறுவனத்தில் வருமான வரித் துறை நடத்திய சோதனையில் ரூ. 132.82 கோடி மதிப்பில் முறைகேடுகள் நடந்திருப்பதும், எக்ஸாலாஜிக் நிறுவனத்துக்கு தொடர்ந்து பணம் அனுப்பி வருவதும் தெரியவந்தது. இந்த முறைகேடுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வருமான வரித் துறையின் இந்த வழக்கின் அடிப்படையில், அமலாக்கத் துறை பண மோசடி வழக்கைப் பதிவு செய்தது.

தொடர்ந்து கடந்த மே மாதத்தில் பினராயி விஜயனின் வீடுகளிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், பணமோசடி தொடர்பாக அமலாக்கத்துறை திரட்டிய ஆதாரங்கள் அடிப்படையில், பினராயி விஜயன், டி. வீணா மற்றும் அவரது கணவர் பி.ஏ. முகமது ரியாஸ் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக் கோரி கேரள டிஜிபிக்கு அமலாக்கத்துறை கடிதம் எழுதியிருப்பதாக தகவல்களின் அடிப்படையில் பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 08.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 22-ம் தேதி

# அமெரிக்க வேலைவாய்ப்பு ‘பூம்’… இந்திய ஐடி பங்குகளுக்கு ‘ஷாக்’!




இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனங்களான இன்போசிஸ், டி.சி.எஸ்., ஹெச்சிஎல் டெக், விப்ரோ உள்ளிட்ட பங்குகள் செப்டம்பர் 7–ஆம் தேதி வர்த்தகத்தில் கடும் சரிவை சந்தித்தன. நிஃப்டி ஐடி குறியீடு 2%க்கும் மேல் சரிந்தது.இன்போசிஸ், எல்.டி.ஐ. மைண்ட்ட்ரீ, மெப்சிஸ் ஆகியவை சுமார் 3% வரை சரிந்த நிலையில், டி.சி.எஸ்., ஹெச்சிஎல், விப்ரோ உள்ளிட்ட பங்குகளும் 12% வரை குறைந்தன.

**அமெரிக்காவில் என்ன நடந்தது?**

அமெரிக்காவின் ஆகஸ்ட் மாத வேலைவாய்ப்பு புள்ளிவிவரங்கள் சந்தையை ஆச்சரியப்படுத்தியுள்ளன. விவசாயம் அல்லாத துறைகளில் 1.62 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்த்ததைவிட இது மிக அதிகம். அதே நேரத்தில், அமெரிக்க வேலைவாய்ப்பின்மை விகிதம் 4.1% ஆக மாறாமல் உள்ளது.

இந்த வலுவான வேலைவாய்ப்பு நிலை, அமெரிக்க பொருளாதாரம் இன்னும் வலுவாக இருப்பதை காட்டுகிறது. இதனால் பணவீக்கம் மீண்டும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

**ஐடி நிறுவனங்களுக்கு ஏன் பாதிப்பு?**

அமெரிக்க நிறுவனங்கள் அதிக ஊழியர்களை நியமிக்கும்போது சம்பளம் மற்றும் செயல்பாட்டு செலவுகள் அதிகரிக்கும். இதனால் நிறுவனங்கள் செலவுகளை கட்டுப்படுத்தும் முயற்சியில், ஐடி சேவைகள், டிஜிட்டல் மாற்றம் போன்றவற்றுக்கான discretionary spending–ஐ குறைக்க வாய்ப்பு உள்ளது. இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனங்களுக்கு அமெரிக்கா மிகப்பெரிய சந்தையாக இருப்பதால், அங்கு நிறுவனங்களின் தொழில்நுட்பச் செலவு குறைந்தால், இந்திய ஐடி நிறுவனங்களின் வருவாய் மற்றும் புதிய ஒப்பந்தங்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் முதலீட்டாளர்களிடம் ஏற்பட்டுள்ளது.

**மற்றொரு பெரிய பயம் — அமெரிக்க வட்டி உயர்வு!**

வேலைவாய்ப்பு தரவுகள் வலுவாக இருப்பதால், அமெரிக்க பெடரல் ரிசர்வ் உடனடியாக வட்டி குறைப்பதற்குப் பதிலாக வட்டி உயர்த்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. UBS கூட 2026–ல் செப்டம்பர் மற்றும் டிசம்பரில் தலா 0.25% வட்டி உயர்வு ஏற்படலாம் என தற்போது கணித்துள்ளது.

வட்டி உயர்ந்தால் அமெரிக்க நிறுவனங்களின் கடன் செலவு அதிகரிக்கும். இதனால் புதிய முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பச் செலவுகள் கட்டுப்படுத்தப்படலாம்.

**ஏற்கனவே இருக்கும் AI அச்சுறுத்தல்**

இதற்கு மேலாக, AI தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியும் இந்திய ஐடி சேவை நிறுவனங்களுக்கு நீண்டகால சவாலாக உள்ளது. கோடிங், மென்பொருள் மேம்பாடு, சோதனை உள்ளிட்ட பணிகளில் AI பயன்பாடு அதிகரித்து வருவதால், பாரம்பரிய IT சேவைகளுக்கான தேவை குறித்து முதலீட்டாளர்கள் கவலைப்படுகின்றனர்.

ஆனால், AI முழுமையாக எதிர்மறையானது அல்ல. AI deployment, integration, modernisation போன்ற புதிய தொழில்நுட்பச் செலவுகள் எதிர்காலத்தில் இந்திய ஐடி நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகளையும் உருவாக்கக்கூடும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**மொத்தத்தில் என்ன?**

AI அச்சுறுத்தல் + அமெரிக்க வட்டி உயர்வு பயம் + IT செலவு குறையும் எதிர்பார்ப்பு என இந்திய ஐடி துறைக்கு ஒரே நேரத்தில் பல அழுத்தங்கள் உருவாகியுள்ளன.

அமெரிக்க வேலைவாய்ப்பு அதிகரித்தது பொருளாதாரத்திற்கு நல்ல செய்தியாக இருந்தாலும், இந்திய ஐடி பங்குகளுக்கு அது தற்போது ‘கெட்ட செய்தியாக’ மாறியுள்ளது.




# மு.க.ஸ்டாலின் மிசாவில்தான் கைது செய்யப்பட்டாரா? காரசார விவாதம்!



சென்னை, செப். 08–

முதல்வரின் நேற்றைய பதிலுரையை அவைக்குறிப்பில் இருந்து நீக்க முடியாது என்றும் அமலாக்கத்துறை குற்றச்சாட்டு குறித்துதான் முதல்வர் பேசியிருக்கிறார் என்றும் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்துள்ளார். முந்தைய திமுக ஆட்சியில் கட்சி நிதி என்ற பெயரில் அரசுத் துறை ஒப்பந்தங்கள், டாஸ்மாக்கில் பெருமளவு நிதி வசூலிக்கப்பட்டதாகவும், இதில் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேரடிப்பயனாளிகள் என்றும் சட்டப்பேரவையில் முதல்வர் சி. ஜோசப் விஜய் நேற்று குற்றஞ்சாட்டினார். சட்டப்பேரவை கூடியதும் இதுகுறித்து விவாதிக்கப்பட்டது.

அப்போது பேசிய திமுக கொறடா எ.வ. வேலு, “நீதிமன்ற விசாரணையில் இருக்கும் வழக்குகள் குறித்து முதல்வர் பேசியிருக்கிறார். பலமுறை இதே அவையில் பேசப்பட்ட சர்க்காரிய அறிக்கை குறித்தும் அவதூறாக பேசியிருக்கார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றுதான் சர்க்காரியா ஆணையம் சொன்னது. சர்க்காரியா ஆணையம் முடித்து வைத்ததை தவறு நடந்ததுபோல முதல்வர் பேசியுள்ளார்.

முதல்வர் ஆதாரமில்லாமல் பேசி இருக்கிறார். காவல் துறை மானியம் தொடர்பான தகவலைத் தவிர்த்து, மிசா, மாறன் குறித்து முதல்வர் பேசியதை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்” என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார், ”மிசா காலகட்டத்தில் திருட்டு, வழிப்பறி, பெண்கள் குறித்த வழக்குகளில் கைது செய்யப்பட்டிருக்கலாம்; ஆனால், எல்லாமே மிசாவில் கைது செய்யப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது.

முதல்வர் ஸ்டாலின் மிசாவில் கைது செய்யப்பட்டார் என எந்த குறிப்பிலும் இல்லை. இரா. செழியன் மொழிபெயர்த்த புத்தகத்திலும் அப்படி குறிப்பிடப்படவில்லை” என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ”முதல்வர் பேசியதை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டிய அவசியமில்லை, அமலாக்கத் துறை குற்றச்சாட்டைதான் முதல்வர் விஜய் கூறியிருக்கிறார்.

முன்னாள் முதல்வர் ஸ்டாலின், மிசாவில் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட செய்தி உண்மையான செய்திதான், அது பற்றி முதல்வர் பேசவில்லை” என்றார்.

# தவெக கூட்டணி கூட்டத்தில் பங்கேற்பில்லை! மார்க்சிய கம்யூ. அறிவிப்பு!



சென்னை, செப். 08–

தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான கூட்டணி கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பங்கேற்காது என்று அக்கட்சியின் மூத்த தலைவர் கே. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். தவெக ஆதரவு கட்சிகளின் 2–வது கூட்டம் சென்னையில் (செப். 9) நடைபெறவுள்ளது. இதையொட்டி தவெக ஆட்சியமைக்க ஆதரவளி த்துள்ள மற்றும் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தவெக ஆட்சியமைக்க வெளியிலிருந்து ஆதரவு அளித்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முதல் கூட்டத்தில் இவ்விரு கட்சிகளும் கலந்துகொள்ளாத நிலையில், இந்த கூட்டத்தில் பங்கேற்பது குறித்து இரு கட்சிகளின் நிர்வாகிகளும் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டனர். இந்த நிலையில், தவெக கூட்டணி கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பங்கேற்காது என்று அக்கட்சியின் முன்னாள் மாநிலச் செயலரும் தலை மைக் குழு உறுப்பினருமான கே. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

# ஜெர்மனி மாகாண தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சி வெற்றி!



பெர்லின், செப். 08–

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனி அரசியலில் இதுவரை இல் லாத ஒரு மாபெரும் அரசியல் அதிரடி திருப்பம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சாக்சனி–அன்ஹால்ட் மாகாணத்திற்கு நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலில், அதிபர் பிரீட்ரிக் மெர்சின் ஆளுங்கட்சிக்கு மக்கள் பலத்த அடியைக் கொடுத்துள்ளனர்.

கடந்த 24 ஆண்டுகளாக இம்மாகாணத்தை ஆண்டு வந்த ஆளுங்கட்சி வெறும் 17.2 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று படுதோல்வி அடைந்தது. மாறாக, கடுமையான குடியேற்ற எதிர்ப்பு மற்றும் தீவிர வலதுசாரிக் கொள்கை கொண்ட ‘ஏ.எப்.டி’ கட்சி 43.8 சதவீத வாக்குகளை அள்ளிக் குவித்து வெற்றியைப் பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 83 இடங்களில் இக்கட்சி 39 இடங்களை தன்வசப்படுத்தியுள்ளது. தனித்து ஆட்சி அமைக்க இன்னும் 3 இடங்களே தேவைப்படும் நிலையில், பிற கட்சிகள் இவர்களுடன் கூட்டணி வைக்க மறுப்பதால் ஜெர்மனி அரசியலில் பரபரப்பும் இழுபறியும் நீடிக்கிறது.

# ஆம்னி பேருந்துகளுக்கு எச்சரிக்கை!



சென்னை, செப். 08–

தமிழகத்தில் வரக்கூடிய நாட்களில் பண்டிகை நாட்கள் அதிகமாக வருகின்றன. குறிப்பாக, விநாயகர் சதுர்த்தி, காந்தி ஜெயந்தி, ஆயுதபூஜை, தீபாவளி போன்ற பண்டிகைகள் அடுத்தடுத்து தொடர்ச்சியாக வரக்கூடிய நிலையில், பொதுமக்கள் பண்டிகைகளை கொண்டாட சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். ஏற்கனவே தீபாவளிக்கான ரயில்கட்டண முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே முடிந்த நிலையில், பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளை பயன்படுத்தி சொந்த ஊர்களுக்கு செல்கின்றனர்.

இந்த நிலையில், பண்டிகை காலங்களில் ஆம்னி பேருந்துகள் வழக்கமான கட்டணத்தைவிடக் கூடுதல் கட்டணங்களை வசூலித்து வருகின்றன. இதனை கண்காணிக்க போக்குவரத்துத் துறை சார்பில் சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட இருக்கின்றன. தமிழகம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்புபணிகள் தீவிரப்படுத்தப்பட உள்ளன. ஒவ்வொரு குழுவிலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் உள்ளிட்ட மூன்று பேர் இடம்பெறுவார்கள். இந்த குழுவினர் நெடுஞ்சா லைகள் மற்றும் முக்கிய பேருந்து நிலையங்களில் சோதனைகள் நடத்தி ஆம்னி பேருந்துகளை கண்காணி ப்பார்கள்.

விதிமுறைகளை மீறுவது மற்றும் கூடுதல் கட்டணம் வசூலிப்பது கண்டறியப்பட்டால், ஆம்னி பேருந்துகளுக்கு அபராதம் விதிப்பதோடு, தேவையான இடங்களில் அனுமதி ரத்து செய்வது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பண்டிகை நாட்களில் தொடர்ச்சியாக ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக புகார்கள் எழுந்த நிலையில், தற்போது போக்குவரத்து துறை சார்பில் இந்த குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# தீபாவளிக்கு முந்தைய நாள் ரயில் டிக்கெட் முன்பதிவு: சில நிமிடங்களில் விற்றுத் தீர்ந்தன!



சென்னை, செப். 08–

தீபாவளிக்கு முந்தைய நாள் ரயில் பயண முன்பதிவு இன்று (செப். 8) காலை தொடங்கிய சில நிமிடங்களில் நிறைவடைந்ததால், பயணிகள் பலரும் ஏமாற்றமடைந்தனர்.

நவ. 7 –ஆம் தேதி (சனிக்கிழமை) பயணத்துக்கான டிக்கெட் முன்பதிவு இன்று (செப். 8, செவ்வாய்க்கிழமை) காலை 8 மணிக்குத் தொடங்கியது. தீபாவளி திருநாள் நவ. 8 ஆம் தேதி என்பதால் ஏராளமானோர் ரயில் டிக்கெட் முன்பதிவுக்கு முயற்சித்த நிலையில், முன்பதிவு தொடங்கிய ஓரிரு நிமிடங்களிலேயே டிக்கெட்டு கள் விற்றுத் தீர்ந்தன. ஏசி டிக்கெட்டுகளும் சில நிமிடங்களிலேயே விற்றுத் தீர்ந்ததால் பயணிகள் கடும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மற்ற பகுதிகளுக்கு குறிப்பாக தென் மாவட்டங்களுக்கு பயணிப்பவர்கள் எண்ணிக்கை, முன்பதிவு டிக்கெட்டுகளின் எண்ணிக்கையைவிட பல மடங்கு அதிகமாக இருப்ப தால் ரயில் டிக்கெட் கிடை க்காமல் பலரும் அவதிப்படுகின்றனர்.

ரயில் டிக்கெட் முன்பதிவை இணையதளத்தில் அறிமுகம் செய்த நிலையில் நேரடியாக ரயில் நிலைய கவுன்டர்களுக்கு வருவோருக்கு டிக்கெட்டுகள் கிடைப்பதி ல்லை என்பது வழக்கமாகிவிட்டது. அதே நேரத்தில் நவீன கைப்பேசி இல்லாதவர்களும், தொழில்நுட்ப முறையை கையாளத் தெரியாதவர்களும் ரயில் நிலைய கவுன்டர்களையே நாடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றமடையும் நிலையே உள்ளது. தீபாவளி அன்று (நவ. 7, சனிக்கிழமை) பயணிப்பதற்கு நாளை (செப். 9, புதன்) காலை 8 மணிக்கு ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



# சனி பெயர்ச்சியால் யாருக்கு நிம்மதி?




நவகிரகங்களில் மிகவும் மெதுவாக நகரக்கூடியவர் சனி பகவான். ஒரு ராசியில் சுமார் இரண்டரை ஆண்டுகள் சஞ்சரிக்கும் சனி, தற்போது மீன ராசியில் பயணித்து வருகிறார். இதன் காரணமாக கும்பம், மீனம், மேஷம் ஆகிய ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனியின் தாக்கம் தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில், 2027 ஜூன் 3–ம் தேதி சனி பகவான் மேஷ ராசிக்கு பெயர்ச்சி ஆக உள்ளார். இந்தப் பெயர்ச்சி கும்பம், மீனம், மேஷம் ஆகிய ராசிகளுக்கு பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும். குறிப்பாக கும்ப ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனியின் தாக்கத்தில் இருந்து குறிப்பிடத்தக்க நிவாரணம் கிடைக்க வாய்ப்புள்ளதாக ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

**தற்போது யாருக்கு ஏழரைச் சனி?**

2025 மார்ச் 29–ம் தேதி சனி பகவான் மீன ராசியில் நுழைந்தார். இதன் காரணமாக:

**கும்ப ராசி பாதச் சனி**
**மீன ராசி ஜென்மச் சனி**
**மேஷ ராசி விரயச் சனி**

என்ற நிலையில் ஏழரைச் சனி நடைபெற்று வருகிறது. சனி மீன ராசியில் இருக்கும் காலம் வரை இந்த மூன்று ராசிகளுக்கும் அதன் தாக்கம் தொடரும். குறிப்பாக 2026 முழுவதும் சாதகமற்ற நிலை நீடிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

**கும்ப ராசி: முதலில் நிம்மதி!**

கும்ப ராசிக்காரர்களுக்கு சனி மேஷ ராசிக்கு பெயர்ச்சி ஆகும் காலகட்டத்தில் ஏழரைச் சனியின் தாக்கம் முடிவுக்கு வரும். இதனால் நீண்ட காலமாக இருந்து வந்த மன அழுத்தம், தடைகள் மற்றும் பிரச்சினைகளில் இருந்து படிப்படியாக நிம்மதி கிடைக்கலாம்.

சனி மேஷத்தில் நுழைந்த பிறகு கும்ப ராசிக்காரர்களுக்கு அடுத்த 30 ஆண்டுகளுக்கு ஏழரைச் சனி தொல்லை இருக்காது என்றும் இந்தக் கணிப்பு தெரிவிக்கிறது. எனவே, இந்த ராசியினருக்கு 2027–ம் ஆண்டு முக்கியமான திருப்புமுனையாக அமையலாம்.

**மீன ராசி: நிம்மதி வரும்… ஆனால் தாமதமாகும்!**

மீன ராசிக்காரர்களுக்கு சனி மேஷத்தில் நுழைந்ததும் பாதச் சனி தொடங்கும். இது ஏழரைச் சனியின் இறுதிப் பகுதியாகும்.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் சிரமங்கள் மூலம் பெற்ற அனுபவங்கள், இனிவரும் காலத்தில் வாழ்க்கையில் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவக்கூடும். வேலை, தொழில் உள்ளிட்ட விஷயங்களில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் உருவாகலாம். பல்வேறு பிரச்சினைகளில் இருந்து ஓரளவு நிவாரணம் கிடைக்கலாம்.

அதே நேரத்தில், அவசரப்பட்டு பெரிய முடிவுகளை எடுப்பதை தவிர்த்து, திட்டமிட்டு செயல்படுவது நல்லது என இந்தக் கணிப்பு கூறுகிறது.

**மீண்டும் மீன ராசிக்கு வரும் சனி!**

மீன ராசிக்காரர்களுக்கு ஒரு முக்கியமான திருப்பம் உள்ளது. 2027 அக்டோபர் 20–ம் தேதி சனி வக்கிர நிலையில் மீண்டும் மீன ராசிக்கு திரும்புவார். இதனால் 2028 பிப்ரவரி 23–ம் தேதி வரை மீன ராசியில் ஜென்மச் சனி தொடரும்.

இதன் பின்னர் 2029 ஆகஸ்ட் 9–ம் தேதி சனி ரிஷப ராசிக்கு பெயர்ச்சி அடையும் போது, மீன ராசிக்காரர்களின் ஏழரைச் சனி முழுமையாக முடிவுக்கு வரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**மேஷ ராசி: இன்னும் பொறுமை தேவை!**

சனி மேஷ ராசிக்கு வரும்போது, மேஷ ராசிக்காரர்களுக்கு ஜென்மச் சனி தொடங்குகிறது. எனவே, இவர்களுக்கு உடனடியாக நிம்மதி கிடைப்பதற்குப் பதிலாக கூடுதல் கவனமும் பொறுமையும் தேவைப்படும் காலமாக அமையலாம்.

முக்கிய முடிவுகளை எடுக்கும்போது அவசரப்படாமல் சிந்தித்து செயல்படுவது அவசியம். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது சரியான திட்டமிடல் இருந்தால் சாதகமான பலன்களைப் பெற முடியும் எனக் கூறப்படுகிறது.

மேஷ ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி முழுமையாக விலகுவதற்கு இன்னும் சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. 2032 மே 31–ம் தேதி சனி மிதுன ராசிக்கு பெயர்ச்சி ஆகும்போது இவர்களுக்கு ஏழரைச் சனி விலகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**மொத்தத்தில்…**

கும்பம் 2027 முதல் நிம்மதி கிடைக்கும் வாய்ப்பு

மீனம் இறுதிக்கட்ட ஏழரைச் சனி; முழுமையான நிவாரணம் 2029–ல்

மேஷம் ஜென்மச் சனி தொடக்கம்; முழு நிவாரணத்திற்கு 2032 வரை காத்திருக்க வேண்டிய நிலை

சனி பகவானின் சஞ்சாரம் வாழ்க்கையில் தாமதம், பொறுமை, அனுபவம் போன்றவற்றை கற்றுக்கொடுக்கும் காலமாகக் கருதப்படுகிறது. எனவே, சிரமங்கள் இருந்தாலும் நிதானமாகவும் திட்டமிட்டும் செயல்படுவது முக்கியம்.




# புகை, மது இல்ல... புற்றுநோயின் நம்பர் 1 எதிரி இந்த வயசுதான்!



புகைப்பிடித்தல், மதுபானம், அதிக சூரிய ஒளி, ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறை ஆகியவை புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கும் காரணிகளாக அறியப்பட்டாலும், வயது முதிர்வும் தவிர்க்க முடியாத முக்கிய ஆபத்து காரணியாகும்.

எந்த வயதினருக்கும் புற்றுநோய் ஏற்படலாம். ஆனால், வயதாக ஆக பெரும்பாலான புற்றுநோய்களின் ஆபத்து கணிசமாக அதிகரிக்கிறது. பல ஆண்டுகளாக உடலில் ஏற்படும் டிஎன்ஏ சேதங்கள் இதற்கு முக்கிய காரணமாகும். வயது அதிகரிக்கும்போது செல்களைப் பழுதுபார்க்கும் திறன், அசாதாரண செல்களை அழிக்கும் திறன் மற்றும் நோயெதிர்ப்பு செயல்பாடு குறைவதால் புற்றுநோய் அபாயம் அதிகரிக்கிறது. அதேநேரம், வயதாகிறது என்பதற்காக அனைவருக்கும் புற்றுநோய் வரும் என்று அர்த்தமில்லை.

**வாழ்க்கைமுறையும் முக்கியம்**

புகைப்பிடித்தல், மதுபானம், அதிக உடல் எடை, உடற்பயிற்சியின்மை, சில தொற்றுகள், புற ஊதா கதிர்வீச்சுபோன்றவை புற்றுநோய் அபாயத்தை உயர்த்துகின்றன. எனவே, வயது முதிர்வைத் தவிர்க்க முடியாவிட்டாலும், மாற்றக்கூடிய ஆபத்து காரணிகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

முதியவர்களுக்கு புற்றுநோய் சிகிச்சை அளிக்கும்போது, அவர்களின் பிற உடல்நலப் பிரச்சினைகள், உடல் இயக்கம், பயன்படுத்தும் மருந்துகள் மற்றும் தனிப்பட்ட முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சிகிச்சை வழங்கப்பட வேண்டும். புகைப்பிடிப்பதைத் தவிர்ப்பது, மதுவைக் கட்டுப்படுத்துவது, உடல் எடையைப் பராமரிப்பது, தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது மற்றும் உரிய பரிசோதனைகளை மேற்கொள்வது மூலம் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற முடியும். எந்த வயதிலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் முறையான மருத்துவப் பரிசோதனைகளும் முக்கியம்.



தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், மஞ்சிநாயக்கன்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## சினிமா துளிகள்..!

# மணிரத்னம் பட டைட்டில் குழப்பம் தீர்ந்தது!



லைஃப்' படத்திற்குப் பிறகு மணிரத்னம், விஜய் சேதுபதி – சாய் பல்லவியை வைத்து ஒரு படம் எடுத்து வருகிறார். காதலை மையமாக வைத்து எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. இப்படத்தை மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனம் தயாரிக்க லைகா புரொடக்ஷன்ஸ் வழங்குகிறது. மணிரத்னத்தின் ஆஸ்தான இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

இப்படம் 'புரொடக்சன் நம்பர் 23' எனத் தற்காலிகமாகப் பெயரோடு துவங்கியது. கொல்கத்தாவில் விஜய் சேதுபதி மற்றும் சாய் பல்லவி நடிக்கும் ஒரு காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து கடந்த சில தினங்களுக்கு இப்படத்தின் டைட்டில் அப்டேட் குறித்த வீடியோ வெளியானது. அதில் 'சி, ம், இ, ல், ஞ், வெ, ல்' என்ற எழுத்துகள் காட்சிகளின் நடுவே இடம் பெற்றிருந்தது. இதனால் இந்த எழுத்தில் டைட்டில் அடங்கியிருக்குமோ என 'வெஞ்சி இல்லம்', 'இஞ்சி வெல்லம்' ரசிகர்கள் அவர்களது யூகங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வந்தனர். டைட்டில் வெளியீடு இன்று இருக்கும் என தெரிவித்த படக்குழு அதன்படி சிறு வீடியோவுடன் வெளியிட்டுள்ளது. இதில் சாய் பல்லவி பின்னணி குரலில் 'நீ இஞ்சி நான் வெல்லம்' எனவும் 'நான் வெல்லை நீ இஞ்சி' எனவும் கூறுகிறார். உடனே விஜய் சேதுபதியும் பின்னணி குரலில் 'இஞ்சி வெல்லம்' என சொல்லி முடிக்க இருவரும் மழையில் நனைந்தபடி ஒரு புகைப்படம் வருகிறது. பின்பு 'இஞ்சி வெல்லம்' என்ற தலைப்பே உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அடுத்த ஆண்டான 2027–ல் ஜனவரியில் படம் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய செய்தித்தாள் நிறுவன தலைவராக கரண் ராஜேந்திர தர்தா தேர்வு!

சென்னை, செப். 08–

இந்திய செய்தித்தாள் நிறுவனத்தின் 2026–27–ம் ஆண்டுக்கான தலைவராக 'லோக்மத் குழுமத்தின் செயல் இயக்குனரான கரண் ராஜேந்திர தர்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்திய செய்தித்தாள் நிறுவனம் (ஐ.என்.எஸ்.) என்பது நமது நாட்டில் உள்ள செய்தித்தாளர்கள், இதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வெளியீட்டாளர்களின் உச்சபட்ச அமைப்பாகும். இந்த அமைப்பின் 87–வது பொதுக்குழு கூட்டம் காணொலிக் காட்சி மூலமாக நேற்று நடைபெற்றது.



இதில் இந்திய செய்தித்தாள் நிறுவனத்தின் 2026–27–ம் ஆண்டுக்கான தலைவராக 'லோக்மத் குழுமத்தின் செயல் இயக்குனரான கரண் ராஜேந்திர தர்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உதவி தலைவராக 'அமர் உஜாலா' நிறுவனத்தை சேர்ந்த தன்மயி மகேஸ்வரி, துணை தலைவராக 'வனிதா' இதழின் ஹர்ஷா மாத்யூ, கவுரவ பொருளாளராக 'கிரிஷோபிகா' இதழின் ஆனந்த் நாத், பொதுச்செயலாளராக மேரி பால் தேர்வாகியுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாக 'தினத்தந்தி' குழுமத்தின் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன், 'ஹெல்த் அண்ட் தி ஆன்டிசெப்டிக்' இதழின் எல்.ஆதிமூலம், 'தினகரன்' குழுமத்தை சேர்ந்த ஆர்.எம்.ஆர்.ரமேஷ் உள்பட 41 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# மெட்ரோ ரெயில் சேவை: அமெரிக்காவை முந்தி, 2-வது இடம் பிடிக்கும் இந்தியா!

புதுடெல்லி, செப். 08–

உலகளவில், மெட்ரோ ரயில் நெட்வொர்க்கில் இரண்டாவது பெரிய நாடாக, நம் நாடு விரைவில் உருவெடுக்க உள்ளது. சர்வதேச அளவில், மெட்ரோ ரயில் நெட் வொர்க்கில், நம் அண்டை நாடான சீனா முதலிடத்தில் உள்ளது. அங்கு, 11,000 கி.மீ.,க்கு மெட்ரோ ரயில் வழித்தடம் உள்ளது.



சீனாவுக்கு அடுத்தபடியாக, 1,386 கி.மீ., மெட்ரோ ரயில் நெட்வொர்க்குடன், அமெரிக்கா இரண்டாம் இடத்தில் உள்ளது. 1,170 கி.மீ. மெட்ரோ ரயில் வழித்தடத் துடன், நம் நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. நாட்டின், 26 நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை உள்ளது. அமெரிக்காவை விட வெறும். 216 கி.மீ., மட்டுமே நம் நாடு பின் தங்கி உள்ளது. கடந்த 2014, ஐந்து நகரங்களில் வெறும், 245 கி.மீ., ஆக இருந்த மெட்ரோ ரயில் நெட்வொர்க், தற்போது, 1,170 கி.மீ., ஆக அதிகரித்துள்ளது.

நாட்டின் பல்வேறு நகரங்களில் தற்போது, 900 கி.மீ.,துாரத்துக்கு மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் நடக்கின்றன. இதில் ஒரு சிறிய பகுதி செயல்பாட்டுக்கு வந்தாலே, அமெரிக்காவை நம் நாடு எளிதில் விஞ்சி இரண்டாம் இடத்தை பிடித்து விடும்.

# செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கு: சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு பிரமாண பத்திரம் தாக்கல்!

புதுடெல்லி, செப். 08–

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாடு போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதான ஊழல் புகார் வழக்குகளில் அரசு தரப்பு சிறப்பு வக்கீல் பி.வாஷிங்டன் தனசேகரன் மாற்றப்பட்டு, வி.செந்தில் முருகன் நியமிக்கப்பட்டதை ரத்து செய்ய கோரி குற்றம்சாட்டப்பட்ட செந்தில் பாலாஜிக்கு உரிமை இல்லை.



மாநில அரசை பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் அரசு தரப்பு சிறப்பு வக்கீல் நியமிக்கப்படுகிறாரே தவிர, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பலன் அளிக்கும் வகையில் நியமிக்கப்படுவதில்லை. எனவே, அரசு தரப்பு வக்கீலை நியமிக்கும் விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபரை கலந்து ஆலோசிக்க வேண்டிய உரிமை கோர முடியாது. அரசுக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வி.செந்தில் முருகன் அரசு தரப்பு சிறப்பு வக்கீல் ஆக நியமிக்கப்பட்ட பிறகு செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்குகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் பிரமாண பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முன்னதாக இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தபோது, விசாரணையை வருகிற 23–ந் தேதிக்கு தள்ளி வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

# டாக்டர்களை தாக்குபவர்கள் வீதியில் நடமாட தகுதியற்றவர்கள் - சுப்ரீம் கோர்ட்டு!

புதுடெல்லி, செப். 08–

டாக்டர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் வீதியில் நடமாட தகுதியற்றவர் கள் என்று சிவசேனா கவுன்சிலர் மீதான வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு கருத்து தெரிவித்துள்ளது. கடந்த ஜூலை 6–ந் தேதி, தானே நகரில் சாஸ்திரிநகர் ஆஸ்பத்திரியில் மாத்ரேவும், அவருக்கு நெருக்கமான சிலரும் நின்று பேசிக் கொண்டிருந் தனர். அப்போது, ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு சிகிச்சை அளிக்க டாக்டர களும், ஊழியர்களும் தாமதம் செய்வதாக அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். இதுதொடர்பாக டாக்டர்களிடம் மாத்ரே கேட்டபோது



வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே மாத்ரேவும் அவரது ஆதரவாளர்களும் சேர்ந்து டாக்டர் களை தாக்கினர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட மாத்ரேவுக்கு கடந்த ஜூலை 14–ந் தேதி தானே கோர்ட்டு ஜாமீன் வழங்கியது. ஆனால் அதற்கு மும்பை ஐகோர்ட்டு இடைக்கால தடை விதித்தது. இருப்பினும், ஆகஸ்டு 7–ந் தேதி, மாத்ரே உள்ளிட்டோருக்கு மும்பை ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கியது டன், சில நிபந்தனைகளை விதித்தது.

இந்த நிபந்தனைகளை ரத்து செய்யக்கோரி, மாத்ரே சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். அதுபோல், அவருக்கு வழங்கப்பட்ட ஜாமீனை எதிர்த்து மாநில அரசு மேல்முறையீடு செய்தது. இந்த மனுக்கள் மீதான முந்தைய விசாரணையின்போது, டாக்டர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் ஜாமீன் பெற தகுதியற்றவர்கள் என்று சுப்ரீம் கோர்ட்டு கருத்து தெரிவித்தது. இந்நிலையில், நேற்று நீதிபதிகள் விக்ரம்நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இம்மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, நீதிபதிகள் கூறியதாவது:–

டாக்டர்கள் மீது தாக்குதல் நடத்தும் இத்தகைய நபர்கள் வீதியில் நடமாட தகுதியற்றவர்கள். நிலைமை படுமோசமாக போய்க் கொண்டிருக்கிறது. பால்கர் என்ற இடத்தில் அதே கும்பல் மீண்டும் டாக்டர்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளது. எனவே, இதுபோன்ற செயலை செய்ய மற்றவர்களை தடுக்கும்வகையில் நாம் செய்தி விடுக்க வேண்டும். மாநில அரசின் மனுவுக்கு 3 வாரங் களில் பதில் அளிக்குமாறு மாத்ரேவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் கூறினர். விசாரணையை 28–ந் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# மீனாட்சி கோவிலில் இளையராஜாவுக்கு சிறப்பு அனுமதியா? பெண் எஸ்.ஐ. மீது பக்தர்கள் புகார்!




மீனாட்சி அம்மன் கோவிலில் தினமும் அதிகாலை 4.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 5 மணிக்கு மணி ஒலித்த பிறகே பக்தர்கள் மூலஸ்தானத்திற்கு அனுமதிக்கப்படுவது வழக்கம். இந்நிலையில், இசையமைப்பாளர் இளையராஜா நேற்று அதிகாலை கோவிலுக்கு வந்தபோது, அவருடன் வந்த பா.ஜ.க. கலாசார பிரிவு மாநில செயலர் சசிகுமார் உள்ளிட்டோரை, பாதுகாப்புப் பணியில் இருந்த பெண் எஸ்.ஐ. ஒருவர் மணி ஒலிக்கும் முன்பே மூலஸ்தானத்திற்குள் அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது. அங்கு சுமார் 5 நிமிடங்கள் காத்திருந்த பின்னர் மணி ஒலித்ததும், இளையராஜா அம்மனையும், சுவாமியையும் தரிசித்துவிட்டு புறப்பட்டார். வழக்கமான நடைமுறைக்கு முன்பாக மூலஸ்தானத்திற்குள் அழைத்துச் சென்றது ஏன்? எனக் கேள்வி எழுப்பிய பக்தர்கள், இதுதொடர்பாக கோவில் உள்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளனர்.




நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது 2026 பெற்ற ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## வங்கி வேலைவாய்ப்பு 2026: SBI + IOB-ல் 498 பணிகள்!




இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளான State Bank of India (SBI) மற்றும் Indian Overseas Bank (IOB)ஆகியவற்றில் மொத்தம் 498 Specialist Officer பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தகுதியானவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

விவரம்: SBI IOB
பதவி: Specialist Cadre Officers Specialist Officers
காலியிடங்கள்: 207–291
அறிவிப்பு எண்: CRPD/SCO/2026–27/23 HRDD/RECT/04/2026–27
பணி வகை: Regular Basis Regular Basis
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 04.09.2026– 29.08.2026
கடைசி தேதி: 25.09.2026– 15.09.2026
விண்ணப்ப முறை ஆன்லைன்: https://sbi.bank.in/
ஆன்லைன் https://www.iob.bank.in/
மொத்தம்: 498 காலியிடங்கள்!
IOB: 291 பணியிடங்கள் கடைசி நாள் 15.09.2026
SBI: 207 பணியிடங்கள் கடைசி நாள் 25.09.2026



தேனி மாவட்ட விளையாட்டு மைதான வளாகத்தில் உள்ள நீச்சல்குளத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் நேரில் சென்று ஆய்வு செய்து பார்வையிட்டார்

# கீழக்கரையில் நகர்மன்ற கூட்டம்!



ராமநாதபுரம், செப். 08–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர்மன்றக் கூட்டம்நகராட்சி வளாகத்தில் நகர் மன்ற தலைவர் செஹனாஸ் ஆபிதா தலைமையில் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி முன்னிலையில் நடைபெற்றது, இதில் குடிநீர் சாலை மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் விவாதிக்கப்பட்டது அதன் தொடர்ந்து குழாய் பதிப்புக்காக தோண்டப்பட்ட சாலைகளை உடனடியாக சீரமைக்க வேண்டும் என வலியுறுத்தி 16–வது வார்டு கவுன்சிலர் சுகைபு உடையில் தர்ணாவில் ஈடுபட்டனர்.

மேலும், புதிய பேருந்து நிலையம் அருகே இருந்த மீன் மார்க்கெட் முன்னறிவிப்பின்றி இடிக்கப்பட்டதாக கவுன்சிலர்கள் சர்பரஸ் நவாஸ் ஷேக் ஹுசைன் குற்றம்சாட்டினர். இடிக்கப்பட்ட கட்டிடப் பொருட்களின் கணக்கு மற்றும் மீன் மார்க்கெட் வாடகை வசூல் குறித்தும் கேள்வி எழுப்பினர். போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் புதிய பேருந்து நிலையம் பின்புறம் தற்காலிக மீன் மார்க்கெட் அமைக்கவும் கோரிக்கை விடுத்தனர்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## புதிய தலைமைச் செயலகம்: முதல்வர் விஜய் ஆலோசனை!



சென்னை, செப். 08–

புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வது தொடர்பாக முதல்வர் ஜோசப் விஜய் செவ்வாய்க்கிழமை (செப்.8) ஆலோசனை நடத்த உள்ளார்.

ரூ.1,200 கோடியில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் அமைக்கப்படும் என முதல்வர் விஜய் 110 விதியின் கீழ் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். எனினும், எந்த இடத்தில் அமையும் என்பதை அவர் அறிவிக்கவில்லை. சென்னை பட்டினப்பாக்கம், கிண்டி, நந்தம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள இடங்கள் இதற்கான பரிசீலனையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

இதுகுறித்து முதல்வர் விஜய் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில், பொதுப்பணித்துறை, வருவாய், நகராட்சி நிர்வாகம், சென்னை மாநகராட்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள். இதில் புதிய சட்டப்பேரவை வளாகத்துக்கான இடத்தைத் தேர்வு செய்வது குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

## தவெகவுக்கு 5 ஆண்டுகள் ஆதரவு தொடருமா? - பெ.சண்முகம் பதில்!



சென்னை, செப். 08–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் பெ.சண்முகம் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது.

''இடைத்தேர்தல், உள்ளாட்சித்தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் குறித்து பேச அழைத்தனர். புதிய கூட்டணியை உருவாக்க வேண்டுமென தவெக தரப்பில் கூறப்பட்டது. தவெக ஆதரவு கட்சிகள் கூட்டத்தில் சிபிஎம் பங்கேற்காது. மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவோம்.

எதிர்க்கட்சிகள் கேட்ட கேள்விகளில் ஒரு கேள்விக்கு கூட முதல்–அமைச்சர் பதில் கூறவில்லை. காவல்துறை மாணியக்கோரிக்கை பதிலுரையில் முதல்–அமைச்சர் சம்பந்தமில்லாமல் பேசியுள்ளார். பேசுவதற்கு நிறைய இடங்கள் உள்ளன. நினைத்ததை எல்லாம் சட்டசபையில் பேசுவோம் என்ற முறையில் பேசுவதை நாங்கள் ஏற்கவில்லை.

சட்டமன்றம் சண்டை மன்றமாக மாறியுள்ளது. சட்டமன்ற நேரலையை மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். வீண் விவாதங்கள் கூடாது. மரபுகளுக்கு உட்பட்டு சட்டமன்றம் நடக்க வேண்டும். சட்டமன்ற நேரத்தை வீணடிக்காமல் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மிசா கைது பற்றி அமைச்சர் நிர்மல்குமார் பேசியது சிறுபிள்ளைத்தனமானது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆயிரக்கணக்கானோர் மிசா காலங்களில் சிறையில் இருந்தனர். மிசா கால கொடுமைகள் குறித்த ஆவணங்கள் நிறைய உள்ளன. மிசா சிறை கொடுமைகள் குறித்த வரலாற்றை தவெக அமைச்சர்கள் படிக்க வேண்டும். தவெகவுக்கு வெளியில் இருந்து தங்களது ஆதரவு தொடரும். தவெக அரசுக்கு 5 ஆண்டுகள் ஆதரவு கொடுப்போம் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. தவெகவின் நிலைப்பாடை பொறுத்து அவர்களுக்கு ஆதவவளிப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.'' இவ்வாறு பேசினார்.






# அக்டோபர் 6-ல் 5 இடங்களில் இடைத்தேர்தல்!



புதுடெல்லி, செப். 08–

மேற்குவங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய 3 மாநிலங்களில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் திங்கட்கிழமை வெளியிட்டது. தமிழ்நாட்டில் மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி), புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி, மேற்குவங்கத்தில் ரெஜினகர், நந்திகிராம் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதனுடன், அசாமின் நாகோன் மக்களவைத் தொகுதிக்கும் அக்டோபர் 6–ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இத்தொகுதியை பிரதித் புர்தோலோய் காலி செய்துள்ளார். 2024–ல் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்ற அவர், பின்னர் பாஜகவில் இணைந்து, சமீபத்திய சட்டமன்றத் தேர்தலில் திஸ்பூர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

**தமிழ்நாட்டில் 2 தொகுதிகள் ?**

மதுராந்தகம் (தனி) தொகுதியில் அதிமுக சார்பில் மரகதம் குமரவேலும், தாராபுரம் (தனி) தொகுதியில் பி. சத்தியபாமாவும் சமீபத்திய தேர்தலில் வெற்றி பெற்றனர்.

முதலமைச்சர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழக அரசுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பின்போது ஆதரவளித்த அதிருப்தி அதிமுக எம்.எல்.ஏ.க்கள் குழுவில் இருவரும் இடம்பெற்றிருந்தனர். பின்னர் மரகதம் குமரவேலும், சத்தியபாமாவும் தங்கள் எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர். இதனால் இந்த இரு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அவசியமானது.

**புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி:**

முதலமைச்சரும் அகில இந்திய நமது ராஜ்ய காங்கிரஸ் தலைவருமான என். ரங்கசாமி, சட்டமன்றத் தேர்தலில் தட்டாஞ்சாவடி மற்றும் மங்களம் ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். இரு தொகுதிகளில் மங்களம் தொகுதியைத் தக்க வைத்து க்கொண்டு, தட்டாஞ்சாவடி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இதனால் தட்டாஞ்சாவ டியில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

**மேற்குவங்கத்தில் நந்திகிராம், ரெஜினகர்:**

மேற்குவங்கத்தின் நந்திகிராம், ரெஜினகர் தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. அக்டோபர் 6–ம் தேதி வாக்குப்பதிவும், அக்டோபர் 9–ம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெறும்.

பாஜக தலைவரும் முதலமைச்சருமான சுவேந்து அதிகாரி, நந்திகிராம் மற்றும் பவானிப்பூர் ஆகிய இரு தொகுதிகளில் வெற்றி பெற்றதால், நந்திகிராம் தொகுதியை காலி செய்தார். ஏப்ரல் தேர்தலில் பவானிப்பூரில் போட்டியிட்ட அவர், திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜியை 15,105 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இதையடுத்து பவானிப்பூர் தொகுதியைத் தக்கவைத்துக்கொண்டு நந்திகிராம் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். 2021 சட்டமன்றத் தேர்தலிலும் நந்திகிராமில் மம்தா பானர்ஜியை அவர் தோற்கடித்திருந்தார்.

அதேபோல், முன்னாள் டிஎம்சி தலைவரான ஹுமாயுன் கபீர், தனது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஏஜூபி (AJUP) அமைப்பை தொடங்கினார். 2026 சட்டமன்றத் தேர்தலில் ரெஜினகர் மற்றும் நௌடா ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்ற அவர், ரெஜினகர் தொகுதியை காலி செய்துள்ளார்.

**தேர்தல் ஆணையத்தின் அட்டவணை;**

செப்டம்பர் 9 அரசிதழ் அறிவிக்கையுடன் தேர்தல் செயல்முறை தொடக்கம்

செப்டம்பர் 16 வேட்புமனு தாக்கல் கடைசி நாள்

செப்டம்பர் 17 வேட்புமனு பரிசீலனை

செப்டம்பர் 19 வேட்புமனு வாபஸ் பெற கடைசி நாள்

அக்டோபர் 6 வாக்குப்பதிவு

அக்டோபர் 9 வாக்கு எண்ணிக்கை

அக்டோபர் 11 முழு தேர்தல் செயல்முறை நிறைவு

வேட்புமனு தாக்கல் கடைசி தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பு வரை பெறப்படும் விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கும் பணி கடைசி தேதி வரை தொடரும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் VVPAT இயந்திரங்கள்பயன்படுத்தப்படும்.

EPIC அட்டை முதன்மை அடையாள ஆவணமாக இருக்கும். வாக்காளர்கள் வாக்காளர் அடையாள அட்டை, பான் அட்டை, ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட் உள்ளிட்ட தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட பிற ஆவணங்களையும் பயன்படுத்தலாம்.

## இடைத்தேர்தல் களம் சூடுபிடித்தது! திமுகவுக்கு இரட்டை சவால்!



சென்னை, செப். 08–

தமிழகத்தில் வழக்குகள் இல்லாத மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய சட்டமன்றத் தேர்தலில் 2 தொகுதிகளில் வெற்றி பெற்ற தவெக தலைவர் விஜய், திருச்சி கிழக்கு எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இதேபோல் அதிமுக எம்.எல்.ஏ.க்களான மரகதம் குமரவேல், எஸ். ஜெயக்குமார், பி. சத்தியபாமா, இசக்கி சுப்பையா, டாக்டர் சி. விஜயகுமார், எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகிய 6 பேரும் பதவிகளை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர்.

சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் ராஜினாமாக்களை ஏற்றதைத் தொடர்ந்து 7 தொகுதிகள் காலியானதாகஅறிவிக்கப்பட்டன. ஆனால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை உள்ளிட்ட 5 தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அங்கு இடைத்தேர்தல் நடத்த சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதனால் தற்போது மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த இரு தொகுதிகளிலும் ஏற்கனவே பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்த மரகதம் குமரவேல், பி. சத்தியபாமா ஆகியோரையே மீண்டும் வேட்பாளர்களாக களமிறக்க தவெக திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. வெற்றிமூலம் மக்கள் செல்வாக்கையும் அரசியல் பலத்தையும் நிரூபிக்க தவெக தீவிரமாக தயாராகி வருகிறது.

மறுபுறம், இவை தங்களின் செல்வாக்கு மிக்க தொகுதிகள் என்பதால் மீண்டும் கைப்பற்றி எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவின் பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் அதிமுக உள்ளது. இதற்கிடையே திமுக தவெக அதிமுக என மும்முனைப் போட்டி ஏற்பட்டால் வாக்குகள் பிரிந்து தவெகவுக்கு சாதகமாகலாம் என்ற அச்சம் திமுகவிடம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் தேர்தலை புறக்கணிக்கலாமா? அல்லது களமிறங்கி விஜய்க்கு பதிலடி கொடுக்கலாமா? என்பது குறித்து அறிவாலயத்தில் தீவிர ஆலோசனை நடைபெற்று வருகிறது. அக்டோபர் 6–ம் தேதி நடைபெற உள்ள இந்த இரு தொகுதிகளின் தேர்தல் முடிவு, தமிழக அரசியலில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## தமிழக அமைச்சரவை விரைவில் மாற்றம்: கூட்டணி கட்சிக்கும் இலாகா மாறுகிறது!




சென்னை, செப். 08–

தமிழக அமைச்சரவை விரைவில் மாற்றம் செய்யப்பட உள்ளது. கூட்டணி கட்சிக்கும் இலாகா மாற்றம் செய்யப்பட உள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23–ந் தேதி, 17–வது சட்டசபை தேர்தல் நடைபெற்றது. வாக்குகள் மே 4–ந் தேதி எண்ணப்பட்ட நிலையில், யாரும் எதிர்பாராத வகையில், தேர்தலை முதல் முறையாக சந்தித்த த.வெ.க. வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்தது.

முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் 35 பேர் இடம் பெற்றிருந்தனர். இதில், கூட்டணி கட்சிகளான காங்கிரசுக்கு 2 இடமும், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு தலா ஒரு இடமும் வழங்கப்பட்டது. தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்று 4 மாதங்கள் ஆகும் நிலையில், ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் துறையில் செயல்பட்ட விதம், துறை சார்ந்த அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனை கூட்டங்கள், சொந்த தொகுதியில் மேற்கொண்ட பணிகள், சட்டசபை செயல்பாடு, த.வெ.க.வினரிடம் நடந்து கொண்ட விதம் உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து முதல்–அமைச்சர் விஜய்யின் ஆலோசகர்களான ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி ஆகியோர் அறிக்கை அளித்துள்ளனர்.

அந்த அறிக்கையில், சில அமைச்சர்களின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை துறை செயலாளர்களை அழைத்து முதல்–அமைச்சர் ஜோசப் விஜய்யும் உறுதி செய்துகொண்டுள்ளார். இந்த நிலையில், சுமார் 1 மாதம் நடைபெற்ற தமிழக சட்டசபை கூட்டம் முடிவடையும் நிலையில், அமைச்சரவை மாற்றியமைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த வகையில், த.வெ.க.வில் ஒரு பெண் அமைச்சர் உள்பட 3 பேர் மாற்றப்பட இருப்பதாக தெரிகிறது.

இதேபோல், கூட்டணி கட்சியை சேர்ந்த 4 அமைச்சர்களில் ஒருவருக்கு இலாகா மாற்றப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும், த.வெ.க. அமைச்சர்களில் ஒருவர், தனக்கு பெரிய துறை வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால், அவருக்கும் இலாகா மாற்றப்படும் என்று தெரிகிறது. அமைச்சரவை மாற்றப்பட உள்ளதால், பல அமைச்சர்கள் கலக்கத்தில் இருக்கிறார்களாம்.

## கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணம் - விசாரணை அறிக்கை சட்டசபையில் சமர்ப்பிப்பு!



கள்ளக்குறிச்சி, செப். 08–

கடந்த 2024–ம் ஆண்டு கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் மெத்தனால் கலந்த விஷச்சாராயம் குடித்து 67 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து விசாரிக்க ஒய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் தீவிர விசாரணை நடத்தி தனது இறுதி அறிக்கையை இன்று தாக்கல் செய்தது. நீதியரசர் கோகுல்தாஸ் தலைமை யில் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் அறிக்கை சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, காவல்துறை, மதுவிலக்கு அமலாக்கத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளின் தரப்பில் கடுமையான அலட்சியமும் கடமை தவறிய போக்கும் இருந்துள்ளது என்று நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், கள்ளச்சாராயம் விற்பனைக்கு பெயர் போன பகுதிகளிலும் காவல் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்காததன் விளைவே உயிரிழப்புகள் அதிகரிக்க வழிவகுத்தது. கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்ட பகு திகளின் அதிகார வரம்பைக் கொண்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அதிகாரிகளே இதற்கு பொறுப்பு.

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் மற்றும் கச்சிராப்பாளையம் வட்டங்களின் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் இந்நிகழ்வுக்கு பொறுப்பானவர்கள்.

விழுப்புரம் மாவட்டத்தில் 2023–ம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட கள்ளச்சாராய துயர சம்பவத்திலிருந்து இச்சம்பவம் நிகழ்ந்த 2024 வரை பணியாற்றிய இச்சம்பவத்திற்கு பொறுப்பான பல்வேறு பதவிகளை வகித்துவந்த அதிகாரிகள் மீது துறை சார்ந்த விசாரணையை தொடங்கிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சார்ந்த கல்வி கற்ற திறன்மிக்க திறன்சாரா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் தொழிற்சாலைகளை அமைக்க கோகுல்தாஸ் ஆணையம் பரிந்துரையும் செய்துள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020